# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாசம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலைமதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூச] யாழ்ப்பாணம்:- கர வருஷ பங்குனி மீ கரு உ வெள்ளிக்கிழமை (28 March 1952) [இல - கூகூ]


# ஐம்புல ஆசையை அடக்குபவனே ஆண்மை உடையவன்

## வாழ்க்கைப் புணையை வழி செலுத்த வேறு துணை இல்லை

அன்பு குடிகொள்ளும் அகமுடையோன், அடக்கம் குடிகொள்ளும் செஞ்சினனுவான். அடக்கமுடையான்வாழ்க்கையே அன்புவாழ்க்கை அன்பின் சிறப்பியல்புகளை நன் குணர்ந்த செம்மல் அடக்கங்கொள்ளுதல் இயல்பே.

அடக்கங்கொண்டோன்பெருமை பெரிது, பெரிது. அவன் தன் அடக்கத்தினுல் தனது பெருமையைச் சுருக்கிக்கொண்டிருப்பினும், அது மலை விளக்காய் மிளிர்கிறது.

### அமர வாழ்வுக்கு ஆதாரம்

அடக்கமுடையான் செயலை அன்பர்கள் அனைவரும் ஆர்வமுடன் நோக்குவர். அவன்போல் ஒழுகி உறுதி பெறவேண்டுமென்று ஒவ்வொருவரும் விழைவர்; அவனைப் போற்றிப் புகழ்வர். அடக்கமுடையானே அவனியின்பத்தை அறிய வல்லவன். அடக்கமுடையானே உலக பாட்டையில் ஒருநெறிதும் இடரின்றிச் செல்ல வல்லவன்.

அடக்கமாவது அடக்குதலாம் எங்ஙனம்? மெய், மொழி, மனங்கள் தீ நெறிக்கண் செல்லாது அடக்குதல். மெய் புலை நிகழ்த்துதலும், வாக்கு பேசுதலும், மனம் நினைத்தலுமாகிய தொழில்களையுடையன, அவற்றை யடக்கி எல்லைக்குள் கட்டுப்படுத்தலே அடக்கமென்க. வினை செய்வதை அடக்குவதால் வாக்கும் மொழிவதை அடக்குவதால் மனமும் ஒருவரற்றுன் அடங்குமாகலின் அம்முறை பற்றி மெய், மொழி, மனமென்று எண்ணிக் கூறப்பட்டன. இவ்வாறே ஆசிரியர் திருவள்ளுவனாரும் கூறினொன்றபிக.

மெய்யடக்கமாவது யாது? ஐம்பொறிகளின் வழிச்செல்லும் அவாவினை யடக்குதலே மெய்யடக்கமாம். மெய்யாவது உடல், ஐம்பொறிகளாவன: மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவை

மெய், மகளிர் மக்களைத் தழுவி மகிழ வேண்டுமென்றும், வாய், இனிய பண்டங்களைச் சுவைத்து இன்புற வேண்டுமென்றும், கண் காண்டற்கரிய காட்சிகளைக் கண்டு களிக்க வேண்டுமென்றும், மூக்கு நறுமண மலரை நன்கு முகர்ந்து பூரிக்க வேண்டுமென்றும், செவி இன்னோசையைச் செவிமடுத்து அதிலே திளைக்க வேண்டுமென்றும் ஒன்றுக்கொன்று மேலாக எழுந்து கட்டுக் கடங்காமல் துள்ளி மனிதனை ஆட்டி அல்லற்படுத்தும் தன்மையனவாம்.

மனைவி, மக்கள் போன்றுரைக் கட்டித் தழுவுதல் முதலிய செயல்களினுல் இன்பத் துய்க்க வேண்டுமென்று மெய் வாதாடும். அதனை அடக்காவிடில் இயற்கையைக் கடந்த எல்லா வழிகளிலும் சென்று கெடும். இயற்கையைக் கடந்த செயலில் இவ்வுலகின்கண் வருருமே இன்பம் காணுரென்பது உறுதி. அவனுர் அற்ப வின்பத்தில் அழிவர்; மெய குலைந்து வாழ்க்கையில் மங்கலை அள்ளிப் போட்டுக்கொள்ளுவர்; என்றுமே தீங்கைத் துன்பமே காண்பர். இன்னோர் மனித வுடல் கொண்ட

தென் ஆபிரிக்கா, டர்பன் திரு. ச.மு. பிள்ளை அவர்கள் வரைவது

மாண்பினை யுணராத மதியிலிகளே யாவர். இன்பமென்பதை இன்னதென் றுணராது துன்பச் சேற்றில் காலையிட்டு மடிவோராவர்.

### இயற்கை தரும் கற்பனை

இனிய பண்டங்களை உண்ண எவர்க்கும் அவாவே. ஆனால் கண்டமட்டும் உண்ண எவராலேனும் இயலுகிறதோ? தெவிட்டுதல் என்னுங் குணத்தை மக்களுக்கும் மாக்களுக்கும் இறைவன் இயற்கையாய் இறைவித்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

# 'வேல் உண்டு ஓரு மெய்த் துணையே'

## வினை ஓட விடும் கதிர் வேல்

'வேல்' என்ற முதல் நிலை நீண்ட தொழிற்பெயர் வேல். வேல் என்பது ஞானமாகும். சத்திவேல் என்றும் கூறுவர். சத்தி யென்பது ஞானம். "சத்திதான் யாதோ வென்னில் தடையில்லா ஞானமாகும்" என்பது சித்தியார் திருவாக்கு. உலகமெல்லாம் போற்றும் ஒப்பற்ற ஞானமே ஞானபண்டிதன் திருக்கரத்தில் வேலாயுதமாகவிளங்குகின்றது. ஞானம் என்பதும் அறிவு என்பதும் ஒன்றுதான். ஞானம் — வடசொல். அறிவு—தென்சொல்.

அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உண்டு.

1 அறிவு ஆழமாக இருத்தல் வேண்டும். எதனையும் ஆழ்ந்து சிந்தித்து அறிதல் வேண்டும். கடலை மேலோடு நோக்கினுல் அலைகள் மட்டுமே தெரியும். சிறிது ஆழத்திற் சென்றுல் மீன்கள் தெரியும். இன்னும் சிறிது ஆழத்திற்குச் சென்றுல் சங்குகள் தெரியும். மிகுந்த ஆழத்திற் சென்றுல் முத்துக்கள் தெரியும். அதுபோல், ஆழமான அறிவில

திரு. கிருபானந்தவாரியார் 'சோலை'யில் எழுதியது

உட்பொருள் உண்மைகள் விளங்கும். ஆழ்ந்து சிந்தியாதவனை "நுனிப் புல மேய்கின்றுன்" என்பர்.

2 அறிவு அகலமாக இருத்தல் வேண்டும். பரந்த அறிவு கொண்டு பார்ப்பவர்க்கே எல்லாம் தெற்றென அங்கை நெல்லிக்கனியெனத் தோன்றும். விசாலமான அறிவில்லாதவனைக் "குறுகிய புத்தியுடையவன் என்பர்.

3 அறிவு கூர்மையாக இருத்தல் வேண்டும். எந்தப் பொருளையும் நுணுக்கமாக நோக்கி உணர்தல் வேண்டும். "கூர்த்தமெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார்" என்பது திருவாசகம். நுணுக்கமான அறிவு இல்லாதவனைக் "கூர்கெட்டவன், உலக்கைக் கொழுந்து" என்பர்.

எனவே அறிவு ஆழ்ந்து அகன்று நுணுகி யிருத்தல் வேண்டும். ஞான வடிவாகிய இறைவனை மணிவாசகர் கூறும் அழகிய அமுத வாக்கை இங்கு உன்னுக:—

"..................வேதங்கள் ஐயாவெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே"

தொடர்ச்சி 3-ம் பக்கம்

உ

## "வானவா மணிகண்டத்தெம் அமுதே!"

திருச்சிற்றம்பலம்

மாய னேமறி கடல்விடமுண்ட
வான வாமணி கண்டத்தெம் மமுதே
நாயி னேனுனை நினையவு மாட்டேன்
நமச்சி வாயவென் றுன்னடி பணியாப்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைத வாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகினின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

திருச்சிற்றம்பலம்

ஆசிரியர் அலை

# அரசியல் நெருக்கடி ஓரளவில் முடிந்தது

## திரு. டட்லி சேனநாயக பிரதமர் ஆனுர்

### மறைந்த தலைவருக்குச் - - - - சிறந்த செய்நன்றி

தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்பெறும் என்றனர் ஆன்றோர். தந்தையின மரபை மைந்தன் காட்டவேண்டுமென்பது பழம் மரபு. அவ்வாறு இலங்கைப் பிரதமர் பதவியை திரு. டட்லி சேனநாயகவே வகிக்கக்கூடியவர் என்ற பொது அபிப்பிராயம் பிரிந்த பிரதமரின் பெருமையைப் பகிரங்கப்படுத்தி விட்டது.

இளைஞர், போதிய அரசியல் அநுபவ மில்லாதவர் என்று நோக்கித் திரு. டட்லி சேனநாயகவைப் பிரதமராக்காது விடவேண்டுமென்று சிலர் எண்ணியிருக்கக் கூடும்.

தன்னயன் கருதுவோர் தாமு தாம் பிரதமராகலாம் என்று மனக்கோட்டை கட்டியிருக்கக் கூடும். ஆனால் பிரதமர் என்ற பதவி காட்டின் பல் வேறு வகையினரும் விரும்பும் ஒருவருக்கே உரியது.

மூன்று மந்திரிப் பதவிகள் நிரம்பப்படா திருக்கின்றன அவற்றுள் ஒன்று போக்குவரத்துப் பகுதி. சேர் யோன் கொத்தலாவலை, மந்திரிப் பதவியை ஏற்றுக்கொள்ளா திருப்பதை அநுமானிக்க வேண்டியிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம தனகர்த்தாரகும் சேர் கொத்தலாவல ஐக்கியத்துக்காகவும் தேசியத்துக்காகவும் பிளவை உண்டுபண்ணுது விட வேண்டியது கடமை. தமது தலைவர், பிரிந்த பிரதமருக்குச் செய்யும் நன்றியும் அதுவேயாகும்.

ஒருதேசம் ஊக்கங் கொண்டாடும்போது அரசியல் நெருக்கடியை வளரச்செய்வது மகா குற்றம். உங்ஙனம் நெருக்கடியை உண்டுபண்ணுகிறவர்கள் தேசநன்மை கருதாது தமது நலத்தை எண்ணுபவர்...

## வலிகாமம் மேற்கு தமிழ்ப்பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி

மேற்சொல்லிய விளையாட்டுப் போட்டி 20-3-52 குருவார பி. ப. 3. 30 மணியளவில் சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக் கலாசாலை விளையாட்டு முன்றிலில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் திரு. மு. சதாசிவம் அவர்கள் கொடியேற்றி வைத்தார். மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர் வட்டாரப்பா பாடக் கொடி வணக்கஞ் செய்யப் பெற்றது.

இப்பெருங்கூட்டத்தில் ஒருவராய (உடல வளர்ச்சித் தலைவர்) திரு. C. கிரசித்தம்பி அவர்கள் சலிபா வைக்கத்துடன் நிர்வகித்துச் செவ்வனே நடாத்தினர். மாவட்ட வித்தியாதிபர் ஸ்ரீ. V தம்பிசிங்கம் அவர்கள் பரிசில் வழங்கினர். காரியதரிசி திரு. ச. அரியரத்தினம் அவர்களைக் கன்றி கூறப் பெற்றது. கீழ்ப் பிரிவு வெண்பொற் கிண்ணம் வாணி நிகேதன வித்தியாசாலை சண்டிருப்பாய் மத்தியபிரிவு வெண்பொற் கிண்ணம் சுதுமலை வடக்கு சைவ வித்தியாசாலை மேற்பிரிவு வெண்பொற் கிண்ணம் சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை.

## மகாசங்காபிஷேகம்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிகள் ஆலயத்தில் கெழும் பங்குனிமீ உ0க உ (2-4-52) புதன் கிழமைகாலை மகாசங்காபிஷேகமும், அன்று இரவு விசேஷ உற்சவமும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே


# இந்துசாதனம்

யாழ். கா ஞூ பங்குனி மீ கருஉ வெள்ளிக்கிழமை


## புதிய பிரதமர்

எவ்வாற்றானும் சிறந்தவரெனஎல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்ற தந்தையிறந்தகவலையில் ஆழ்ந்திருந்த மைந்தர் திரு. டட்லி சேனநாயகவை மந்திரிப் பதவி நாடி வந்து நயந்து நின்றதென்ற உண்மையே இலங்கைப் புதிய பிரதமரின் தகுதியை நன்கு புலப்படுத்துகின்றது. சுயகாயக ஆட்சியில் பிரதமமந்திரியாரகக் கடமை ஆற்றுபவர் நாட்டின் பிரதிநிதிகளின் நன் மதிப்புக்குரியவராய் அவர்களின் பெரும்பான்மையாரின் ஆதரவு பெறக் கூடியவராய் உள்ளவராதல் வேண்டும். அண்மையில் ஒரு பொதுத் தேர்தல் நிகழவிருக்கும் இந்த வேளையில் அரசியல் நெருக்கடியில்லாது ஒரு மந்திரி சபை நிறுவப்பட வேண்டியதத்தியாவசியகம். எனவே இப்போது பாராளுமன்றத்தில் அரசியற் கட்சியிற் பேராதரவு உள்ளவர் ஒருவரே பிரதமர் பதவியை வகிக்கக்கூடியவராவர்.

திரு. டட்லி சேனநாயக மறைந்த தலைவரின் மணியனைய மைந்தன் என்ற முறையிலே பிரதமராக்கப்படவில்லை. அரசியற் கட்சியில் அனைவரின் அன்பும் ஆதரவும் உடையர் என்பதனுற் புது மந்திரி சபையை நிறுவும்படிதேசாதிபதியவர்களாற் கேட்கப்பட்டாரென்பதை எவரும் அறிவர்.

இந்த நிலைமையில் திரு டட்லி சேனநாயகவின் அரசியற் பொறுப்புப் பன்மடங்கு அதிகரித்துவிட்டது. தந்தையார் எங்ஙனம் நாட்டைச் சீரிய முறையில் பரிபாலித்து வந்தாரோ அங்ஙனம் அப் பெரியாரின் அடிச்சுவட்டில் நின்று தேசப் பணியைச் செவ்வனே ஆற்றி வரவேண்டியவராய் நிற்கும் புதிய பிரதமருக்கு அரசியற்கட்சித் தலைவர்களும் பொது சனங்களும் ஆதரவளிக்க வேண்டியது முறை. என்னை? இப்போது நிறுவப்பெற்ற மந்திரிசபை ஒரு இடைக்கால அமைப்பு. பொதுத் தேர்தலில் அரசியற் கட்சிகள் தத்தம் தத்துவத்தை உபயோகித்துப் போராட்டத்தை ஆர்வமுடன் நடத்திப் பொது சனத்தின் அபிப்பிராயத்தை அறியலாம். இந்த இடைவேளையில் இதுவரை நடந்துவந்த அரசியல் நிர்வாகம் தொடர்ந்து வரக்கூடியநிலைமை சாதாரணமாக இருக்குமேயானால் அதைக் குலைத்துவிட எவரும் எண்ணவொண்ணுமா!

தலைமைப் பதவியை நாடும்வரையும் தேசத் தொண்டர்படையில் உழைத்துவிட்டு அப்பதவிகிடைகாத காலத்தில் பணிசெய்யாது விடுதல் சுயநலவிருப்பத்தின் பயங்கர வேடத்தைப் பகிரங்கமாகக் காட்டும்! அரசியலில் வாய் வேதாந்தமே எவரும் பேசிக் கொள்கின்றார்கள் கட்சிகளும் கட்சிப் பிளவுகளும் தலைமை தாங்கும் நிலைமையிலேயே தோற்றுகின்றன. பயன் கருதாது பணி செய்பவர்களைக் காண்பது அரிதினுமரிது. தலைவர் பதவிக்குத் தக்காரை, தெரிவு செய்யவேண்டியவர்கள் நியமிப்பதா அல்லது 'என்னைத் தலைவனுக்குங்கள்,' என்று ஒவ்வொருவரும் முன்வருவதாமுறை? இப்போதைய அரசியல் நெருக்கடியில் திரு. டட்லி செனநாயக பிரதமப் பதவியை விரும்பாதுநிற்க அப்பதவி அவருக்கே அமையுமென்று நிர்வாகப் பொறுப்புடையோர் நாடிநின்றமை பெரிதும் பாராட்டப்படவேண்டியதொன்று.

வயதில் இளைஞர், அரசியல் அநுபவத்திலும் வயது வந்தவரல்லர் எங்கள் புதிய பிரதமர். ஆனால் அறிவு ஒழுக்கம் கூடியவராயும் தக்காரென நன்கு மதிக்கப்பெற்ற தந்தையாரின் அரசியல் நெறியை நன்கு அவதானித்துப் பயன பெறக்கூடிய வகையில் மந்திரி சபையிலிருந்தவராயும் உள்ளவராகையால் அரசியல் நிர்வாகத்தை நெறி தவறாது ஆற்றுவார் என நம்புகின்றோம்.

இலங்கையிற் பல வேறு சாதியாளருடன் மூன்று மொழிகளும் உள என்ற உண்மையையும் அருகாமையில் எங்கள் மூதாதையினரின் தாய்நாடாகிய பரத கண்டத்தோடு இத்தீபகம் எத்தகையமுறையில் நடந்து கொள்ள வேண்டியதென்பதையும் புதிய பிரதமர் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற புத்திமதியைப் பகர்கின்றோம். பரந்த நோக்கும், தாராள சிந்தையும், நெறி தவறு நிருவாகமும் குடியரசு முறை செவ்வனே நடைபெற இன்றியமையாதவை. இவ்வுண்மையைப் புதிய பிரதமமந்திரி மறக்கவில்லை என்பது அவர் விடுத்துள்ள வானொலிச் செய்தியில் நன்கு புலப்படுகின்றது.

எங்கள் புதியபிரதமர் கடவுள் வணக்கஞ் செய்தும் குருமார்களின் ஞானோபதேசங் கேட்டும், முன்னறி தெய்வமாகும் அன்னையின் பாதாரவிந்தத்தில் வீழ்ந்து பணிந்து ஆசிபெற்றும் தேசப்பணியைச் செய்ய ஆரம்பித்தார் என்பது அன்னாரின் குறிக்கோளை இனிது காண்பிக்கின்றது.

அவர் அரசியற் கடமையை ஒருபாற் கோடாது சமன்செய்து நன்கு ஆற்றிக் குடிகளின் பெருமதிப்பைப்பெற இறைவன் திருவருள் பாலிப்பாராக.

## உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 30—3—52——5—4—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம் முதலாகல்.

இவ்வாரம் அரும்பாடு படவேண்டிவரும் ஆனால் விரும்பியவை கைகூடும். செவ்வாய்க் கிழமைக்குப் பின் நிலைமை திருத்திகரமாக மாறும். பண ஆதாரம் உண்டு எதிர்த்துப் போட்டியிடுபவர்கள் பின்வாங்க நேரிடும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகினி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

முதலிடுவதில் இவ்வாரம் கவனமாக இருத்தல் வேண்டும். பங்கு வியாபாரத்திலும் சுற்றத்தவர்களின் காரியங்களிலும் கஷ்ட காலம். விவாதஞ் செய்வதைத் தவிர்க்க.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

செவ்வாய்க் கிழமைக்குப் பின் உத்தம காலம். விரும்பியவை கைகூடும். கீர்த்தியையும் நண்பர் உதவியாற் சித்தியையும் எதிர்பார்க்கலாம். முயற்சிகளைத் தொடர்ந்து செய்க.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

தேகநிலையைப்பற்றிக் கவனமெடுத்தல் வேண்டும். மனத் தொந்தரையும் காணப்படும். வரவு செலவைச் சமன்செய்வது சுலபமல்ல. காரிய சித்திக்குத் தீவிரமாக உழைக்க வேண்டும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்.

குடும்பப் பிணக்குகள் தாமாகவே நீங்கும். சகோதரிகளுடன் கருமம் பார்ப்பது சுலபமாகிவிடும். புது முயற்சிகளிற் சித்தியும் எதிர்ப்போருக்குத் தோல்வியும் காணப்படும். கூடிய சீக்கிரத்தில் சனிக்குத் தக்க ஒரு காரிய நிறைவேற்றம் காணப்படும்.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

சொந்த அலுவல்களில் சில எதிர்ப்புகள் தலைகாட்டும். முக்கியமான மாற்றங்களைச் செய்யாது சாதாரண வேலைத் திட்டத்தைச் செய்து முடிக்கவும். எதிரிகள் கட்டம் விளைவிக்க முயற்சித்தபோதிலும் அதைச் செய்து முடிக்கமாட்டார்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்.

முதல் இரண்டு நாட்களைத் தவிர வாரமுழுமையும் பணநிலை நன்று. பெண்பாலர் உதவி உண்டு விவாகமாகாதவராயிருப்பின் விவாகப் பேச்சோ ஒழுங்கோ அண்மையில் நடைபெறக்கூடும். எண்ணியபடி கருமங்களை ஆற்றவும்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இவ்வாரம் முழுவதும் சிறு சிறு தொந்தரையாகவே இருக்கும். செவ்வாய் புதன் வியாழன் காலை ஆகிய நாட்கள் மிகவும் மோசமானவை. சித்திபெற வேண்டுமெனில் புது நிலைமைக்குத் தக்கவாறு நடந்துகொள்ள வேண்டும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

முன்னேற்றத்துக்குரிய வாரம். ஆனால் தொடக்கமும் முடிவும் தொந்தரையைக் கொடுக்கக்கூடும். கிழமை நடுப்பகுதியில் புதுக் கருமத்தைத் தொடங்கலாம்.

**மகரராசி** உத்தராடம் 2,3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

அந்நியரும் பழக்கமில்லாதவர்களும் உதவி செய்வார்கள் பணநிலையும் ரொம்ப சலுகைகளும் கிடைக்கும். புது முயற்சிகளைத் தொடர்ந்து நடத்துக.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

ஏராளமாகச் செலவு செய்ய வேண்டிவரும். கவனமில்லாவிட்டால் நண்பர்களின் வயவஞ்சகம் தலைகாட்டும். புதுமுயற்சிகள் கவனமாக நடத்தப்பட வேண்டும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இவ்வாரத்தில் ஒரு நற்காலம் ஆரம்பமாகக் கூடும். உமது முயற்சிகளில் சுற்றவர்களால் ஊக்கம் கிடைக்கும் உத்தியோக முறையில் உள்ளவர்களுக்கு ஒரு ஏற்றம் அல்லது வாய்ப்பான மாற்றம் செதியில் வரக்கூடும்.

தொடர்கதை

## இன்பத்தின் நிலை இதுதானு?

இறை ஒளி

15

### மாறி மாறி வருங் காலமே!

மாணிக்கவல்லி மனமுடைந்து விழுந்து வருந்துவதைக் கண்ட சங்கரர் வேதாகம சாத்திர அறிவும் சைவனுட்டான நியதியும் நிரம்பப்பெற்றமையால் மனத்தைத் தளரவிடாது நிலைமையிற கவலைகொள்ளவேண்டியதில்லை என இருந்து சொல்லுவார். "உலகமோ நாடகசாலை! நடிகர்கள் பல வேறு வேடம் பூண்டு நடிப்பதும விடுவதுமாயுளவர்கள். இன்ப துன்பம் சகடக் கால் போல் வரும. அன்றி அரிச்சந்திரன் உண்மை கடைப்பிடிக்க மயானம் காக்கவில்லையா? - அவன் அரசனல்லவா? நளன் நாடு நகரிழந்து நடுக் காட்டில் நின்றலையவில்லையா? - அவன் மன்னனல்லவா? பாண்டவர்கள் நாடுவிட்டுக் காடாளவில்லையா? இராம இலக்குமணர் காடுஞ் செல்லவில்லையா? அவர்கள் இந்திர வாழ்வும் அடைந்த துன்பமும் எங்கே! மனித வாழ்வு மாயமானது. மாய நிலையை உண்மை என்று எண்ணி நாம் பரிதாபப்படுகின்றோம். 'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு' என்றபடி நாளை நடப்பதை யாரறிவார்? இறைவன் எங்கும் உளன் என்றும் உளன். எங்கள் எண்ணத்தில் அவனை வைத்துக்கொண்டால் இன்பமும் துன்பமாகும். மாணிக்கவல்லி நீ பெண்; பேதை; யாதும் அறியாதவள். இளமை என்றும் நிற்குமா? யாக்கைதானும் நிற்குமா? நில்லாவுலகமிது, எல்லாம் இறைவன் செயல் கவலைப்படாதே. நகரவாழ்வு வேண்டாம், நாட்டிலே பணிபோல ஓடும் ஆற்றங்கரையில், நிழல் மரத்தின் கீழ் இயற்கை அன்னை இன்புற வீடமைப்போம்; எம் முன்னோர் வாழ்ந்த வாழ்வு வாழ்வோம். ஆனால் எங்கள் மூர்த்தை பங்கஜம் நகரவாழ்வின் பகட்டைக் கவர்ச்சிக எணைத்தை எண்ணி விட்டாள், ஒன்றும் அறியாதவள் உலகத்தை அறிய வந்துவிட்டாள். கலைவாணியைத் தேடி கவலை வாழ்நாளை நாடிவிட்டாள் இல்லை. இறைவனருள் எங்களுக்குண்டு. இனிப்பேசி ஆவதொன்றுமில்லை. வாருங்கள், புறப்படுங்கள் என்று சொல்லி இதய சமாதானஞ் செய்துவிட்டு நாற்புறத்தில் நதிக்கரையில் நல்மரக் காவருகில் சங்கரர் புராதனமாயுள்ள கோட்டத்தில் உள்ள இல்லத்திற்குப் புறப்பட்டனர்.

### நட்டாற்றில் நாவாய் நிலை!

இவ்வாறாக, ஆசிரியர் குமரன் நிலைமை கட்டாற்றில் நாவாய் போன்று கலங்கரை விளக்கைக் கண்ணுங் கருத்துமாய்த் தேடும் மாலுமி எனன இருந்தது. எழுதிய கடிதம் மாயமாய் மறைந்ததும், பகவதியின வல்லடி வழக்கும் இவையெல்லாம ஒருங்கு சேர்ந்து இதயத்தை உதைத்தன. காதல் நோயாற் கலங்குவான் ஒருவன் மனநிலையும் குற்றஞ் சாட்டப்பட்டவன் நீதிமன்றத்தில் தீர்ப்பு எவ்வாறு முடியும் என்று ஏங்கி நிற்கும் நிலையும் ஒரே தன்மையன.

கள்ளினுங் கொடிது காமம் என்றது உண்மையே. மதுவுண்டு வெறிகொண்டவன் ஒரு சிறுபொழுது மயக்க முறுகின்றான். ஆனால் மற்றைய காதல் வாழ்க்கை முழுவதையும் மயக்கி விடுகின்றதே! ஒருவர் வாழ்வல்ல அதோடு பலரின் வாழ்வையே பாதிக்கிறது. பங்கஜம் மனநிலை எவ்வாறுமோ. அவளுக்குப் பங்கந்தலந்த வினைவந்ததுகிட்டேனே! என்று ஏங்கி நின்ற ஆசிரியர் அந்த இடத்தையே விட்டு அகன்றுவிடத் தீர்மானித்தார். காலந் தாழ்த்தாது கடலை ஞானம உதித்தவர்போல

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் உண்டு ஒரு மெய்த் துணையே

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

"முருகன் கையில் வேலை எப்போதும் தாங்கியிருக்கின்றனரே! சூரசங்காரந்தான் முடிந்துவிட்டதே? இப்போது யாரைச் சங்காரஞ் செய்ய வந்திருக்கின்றார்? பூசை செய்பவரைச் சங்கரிக்கவா? கும்பிடப்போகும் கும்பலைக் கொல்லவா? எதன்பொருட்டு வேலை ஏந்தியுள்ளார்?" என்று வினாக்கள் சிலர் வினவுகின்றார்கள். அவர்களுடைய தெளிவு இல்லாத சிறிய மதியில் வேலைக் கொல்லும் படையாகக் கொண்டுள்ளார்கள். என்னே பேதைமை! வேல் ஞானம் என்று அறிக.

அறிவு ஒன்றுக்கும் அஞ்சாது. அஞ்சாமையைத் தருவது அறிவு என்க. அறிவுடையார் ஒன்றுக்கும் அஞ்சார். ஆனால் அஞ்சாதவர் எல்லாரும் அறிஞர் என்று கருதக் கூடாது. பால் வெண்மையாக இருக்கும். ஆனால் வெண்மையாய் இருக்கும் சுண்ணாம்பு நீர் முதலியவைகளைப் பால் என்று கருதுதல் கூடாது.

அறிவின் சிகரமாகிய அப்பரடிகள் 'அஞ்சுவதுமில்லை: அஞ்ச வருவதுமில்லை' 'நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்' 'அல்லல் என் செயும்? அருவினை என்செயும்?' 'வானந் துளங்கிலென்? மண் கம்பமாகிலென்?' என்று முழக்கும் வீர வசனங்களைக் காண்மின.

**'அஞ்சல்' என்ற உறுதி**

முருகப்பெருமான் திருக்கரத்தில் வேலைத் தாங்கியிருப்பதன் உண்மை, தன்னை வழிபடுவார்க்கு அஞ்சாமையாகிய ஞானத்தை வழங்கும் பொருட்டு என்று தெளிக. அதனால் அத்திருவேல் வீரவேல் எனப்பட்டது.

அறிவு கூர்மையானது என்று முன்னே அறிந்தோம். அறிவின் கூரிய அறிவை நாம் பெற வேண்டுமாயின், வேலை வணங்கவேண்டும் அதனால் வேல தாரைவேல் எனப்பட்டது. (தாரை—கூர்மை)

ஆணவ மலமாகிய சூரபன்மனையும், மாயாமலமாகிய தாரகனையும், கன்மமலமாகிய சிங்கமுகனையும் ஞானமாகிய வேல் அழித்து சுதந்தர நற்குணங்களாகிய தேவர்களைச் சிறைமீட்டது, அதனால் வெற்றிவேலை வழிபடுவார் மல நீக்கமும் இன்ப ஆக்கமும் பெறுவர் அது 'விண்ணோர் சிறைமீட்ட தீரவேல்'.

ஆன்மாக்களுக்கு உபகரிக்கின்ற பெருமான் செவ்வேள் எனப்படுவான். (வேள் — உபகரிப்பவன்) உயிர்க்கு எப்பொழுதும் துணையாக நின்று அஞ்ஞானத்தையகற்றி மெய்ஞ்ஞானத்தை நல்கும் குமரவேல் திருக்கரத்தில் நீங்காது நின்று துணைபுரிகின்றபடியால் 'செவ்வேள் திருக்கைவேல்' எனப் பேசப்பட்டது.

பிறவிப் பெருங்கடலை வற்றச்செய்யும் ஆற்றல் படைத்தது ஆதலின் 'வாரி குளித்த வேல்'.

**வழித்துணை**

பறவைக்கடலை வற்றச்செய்து வெற்றி கொண்டது ஆதலின 'கொற்றவேல்.'

அது ஆணவ மலமாகிய சூரனையும், சஞ்சித வினைத்தொகுதியாகிய குன்றத்தையும் பிளந்தது ஆதலின் அத்தனிவேல் உயிர்களாகிய நமக்கு எப்போதும் துணையாக நின்று உதவும்.

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் வாரி குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றுந் துளைத்தவேல் உண்டே துணை."

"வானைக மக்கும் வேலை வணங்குவது எமக்கு வேலை" என்று வேலை வழிபடும் அன்பர்கட்கு வினை அகன்றுவிட்டு ஒழியும். 'வினையோட விடுங் கதிர்வேல்' என்றும் 'எனது தீவினைவேலா மடிய கீறுதனிவேல் விடுமடக்கல் வேலா' என்றும் அருணகிரிநாதர் அருளிச் செய்கின்றார். ஆதலின் அன்பர்கள் 'வேலை தங்கட்டு மலை குமாருடன் பட்டுருவ வேலையுற விட்ட தனி வேலை' வந்தித்துச் சிந்தித்து வாழ்த்தி வலிமையும் இளமையும் பெறுவார்களாக.

---

## செய்தித் திரட்டு

=O=

மகாத்மா காந்தி அவர்களின் தேகநிலை நன்றாயிருக்கிறதென வைத்தியர்கள் அறிக்கை விடுத்திருக்கின்றனர். இவரோடு உண்ணாவிரதம் பூர்த்தியாகின்றது.

X X X

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள பக்கிரும் என்னும் இடத்திலிருந்து 300 மக்களுள்ள 50 இந்துக் குடும்பங்கள் தங்கள் வீடுகளைவிட்டு வெளியே போய்விட்டார்கள்.

காரணத்தை விசாரித்த பொழுது அங்குள்ள முஸ்லிம்கள் பொலிசாருடைய உதவியுடனேயே பலவந்தமாய் இந்துக்களுடைய வீடுகளுட் புகுந்து தாங்கொணுத்துயர் விளைத்தனராம். அரசாங்க அதிகாரிகளுக்கு முறையிட்டபோது அவர்கள் மௌனஞ் சாதித்தனராம். அவ்வின் பெருக்கு இப்படியிருக்கின்றது. மன்னனெவ்வழி மன்னுயிரவ்வழியல்லவா?

---

## ஏல விற்பனவு

மோட்டார் லொறி நம்பர் Z.1469

(போட் V.8)

1952-ம் ஆண்டு சித்திரைமாதம் 5-ந் திகதி சனிக்கிழமை காலை 11 மணியளவில் மேற் சொல்லப்பட்ட லொறி, (லாட்லைசென்ஸ் இல்லாமல்) யாழ்ப்பாணம் முனிசிப்பல் கச்சேரியில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வாங்கியவர் உடன் முழுத்தொகையையுங் கட்டி லொறியை எடுத்துவிட வேண்டும். லொறியைப் பார்வையிட விரும்புவோர் முனிசிப்பல் கச்சேரியில் கந்தோர் வேலை நேரங்களில் பார்வையிடலாம்'

கா. சண்முகம்,
கமிஷனர்.

முனிசிப்பல் கந்தோர்
யாழ்ப்பாணம்,
19-3-52.

---

## அணிந்துரை அரங்கம்

நந்தன ஆண்டுத் திருக்கணித பஞ்சாங்கம் என்றும்போலச் சிறப்பாக வெளிவந்துள்ளது. சித்தாந்த சோதிடம் என்ற மந்திரப்பொருத்தம் பார்க்கும் முறை ஒன்று புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. 'ஜ்யோதிர் பூஷணம்' T. S. விசுவநாத சிரௌதிகள் B.A. அவர்கள் மாணாக்கர் யாழ்ப்பாணம் மட்டுவில் பிரம்மஸ்ரீ சி. சுப்ரமணிய ஐயர் அவர்களாற் கணிக்கப்பெற்றது.

ஒன்றன் விலை 1/25.

எமக்கனுப்பிய பிரதிகளை அன்புடன் ஏற்றும்.

---

## மதுவிலக்குப் பிரசாரம்

வட இலங்கை மதுவிலக்கு மகாசபையாரின் பொதுக் கூட்டமொன்று இன்று மாலை 5 மணியளவில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திற் கூடும். சபைத்திட்டம் ஆலோசிக்கப்பெற்று அங்கீகரிக்கப்படும்.

வருகிற ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு மல்லாகம் சைவாங்கில வித்தியாசாலை மண்டபத்தில் பிரசாரக் கூட்டம் ஒன்று நிகழும். கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. ம. செல்வத்துரை J. P. அவர்கள் தலைமை வகிப்பார்கள். Dr. C. குருசாமி அவர்களும் இன்னும் பலரும் சொற்பெருக்காற்றுவார்கள்.

---

# ஐம்புல ஆசையை அடக்குபவனே ஆண்மை உடையவன்!

1—ம் பக்கத் தொடர்ச்சி

தன்மையாட்சியை என்னென்பேம்! இதன் உண்மையை அறிவுடையோர் சிறிது உன்னினும் அன்னோர் அரிய கருத்துக்கள் பல காண்பர்.

இனிப்புப் பண்டங்களைச் சிறிது உண்டவுடன் இனி வேண்டாமென்னும் தெவிட்டுதல் ஏற்படுகிறது. ஏனைய சுவைப் பண்டங்களை உண்ண அவ்வளவு விரும்பாவிடினும் அப்பண்டங்களைத் தின்னும் அளவு இனிப்புப் பண்டங்களைத் தின்ன முடிகிறதில்லை. எத்தச் சுவையை நாக்கு மிகுதியாய் விரும்புகிறதோ, அதை அதிகம் சுவைக்க முடிகிறதில்லை, யென்பது ஒரு விந்தை! இதனை இறைவன் அமைத்துள்ளதன் கருத்து என்னெனில் அளவின்றி உட்கொண்டால் வயிறு கெட்டு, உடல் கெட்டு, வாழ்க்கையும் உடன்கெட்டு, மனிதன் வீணா இறந்துவிடுவான். ஆகையால் வீணா இறந்துவிடின் அவன் மனிதவுடல் தாங்கிய தன் பயனெய்தாது போவான். இங்ஙனம் மனிதன் பயனின்றி அழியலாகாதென்னும் நோக்கத்துடனேயே தெவிட்டுதற் குணத்தை இறைவன் அமைத்துள்ளானென்று ஏன் இயம்பலாகாது?

சுவைத்துத் துய்க்கும் சிறிதோர இன்பங்கருதி, நிலைத்த பேரின்பம் நல்கும் வாழ்க்கையின் செம்மையைத் தகர்த்துவிட எவர்தான் ஒப்புவார்? எனவே, இப் புல்லிய நாவின்பத்தை அடக்கியாளுதல் மக்கள் கடமையாகும்.

### காந்தி அடிகள் கருத்து

இது குறித்துக் காந்தியடிகள் அருளுவதைச் சிறிது நோக்குவோம். "எவனொருவன் தன் நாக்கு உருசியை அடக்குகிறானோ, அவனால் இந்திரிய நிக்கிரகம் செய்ய முடியுமென்பதை நான் அனுபவத்திற் கண்டிருக்கிறேன். மருந்தை உண்பது போலவே உணவையும் உட்கொள்ள வேண்டும். நாக்குக்கு நன்றாயிருக்கிறதா, இல்லையா வென்று பாராது, அது உடலுக்கு ஏற்றதா வென்பதைமாத்திரம் கருதல் வேண்டும்.'' அன்பர்களே! இச் சீரிய மொழிகளைச் சிந்தியுங்கள்!

இன்பமான காட்சிகளைக் காண எவர் மனந்தான் விரும்பாது? இயற்கைக் காட்சிகளை நாடோறும் உள்ளத்தில் உவகை பொங்கியெழுகிறது. மற்றுமுள்ள செயற்கைக் காட்சிகளிலும் நமது மனம் செல்லாமலில்லை. எத்தனை முறை எத்தனை காட்சிகளைக் கண்டாலும் பின்னும் கண்டுகளிக்கவே உள்ளம் அவாவுகிறது. காசும் முழுவதையும் காட்சிகளைக் காணுவதில் செலவிட்டாலும் உள்ளம் சலிப்பதில்லை. என்ன விந்தை! காட்சிகளைக் கண்டு களித்து அத்துடன் வாழ்வை முடித்துவிடுவதற்கா நாம் இம்மண்ணில் மக்களாய் உதித்தது? ஒரு ஊரைநாடிச் செல்லுவோன், இடையில் தன் மனதைக் கவர்ந்த மாட்சியுள்ள காட்சியொன்றைக் கண்டு வியந்து, அதிலே தன் நெஞ்சைப் பறிகொடுத்து, அவ்விடத்திலேயே நின்று விடுவானுயின், அவனை எவரேனும் அறிவுடையோன் என்பரோ? அறிஞர் எள்ளி நகையாடரன்றோ அவனேன் இலக்காவன்? அதுபோலவே இறைவனது இன்னுலகை நோக்கி யாத்திரை செய்யும் மனிதன், உலகப்பாட்டையில் உண்டாம் காட்சிகளில் ஈடுபட்டு மதிமயங்கி நின்று விடுவோன் அறிவீனனென்பதில் யாது தடை?

### காட்சி இன்பங் கொடிது!

கூத்தும் இசையும் படக்காட்சியும் மனிதன் மனதை கவரும் தன்மையன இதில் நெஞ்சைச் கொள்ளை கொடுத்தவன் இறைவனைக் காண என்னுவதேது? ஆகவே காட்சி இன்பத்தினும் அடக்கிக்கொள்ள வேண்டுமென்க.

மனம் நிறைந்த மலரைக்காணின் மனம் மகிழ்கிறது. முகர்ந்தால் பரிமள வாசம் இன்பம் பொங்கச் செய்கிறது. அத்துடன் அதை அகற்றிவிட்டால் நலமே. அங்ஙனமின்றி மனதைக் கட்டுக்கடங்காமல் இழுத்துச் செல்வதால், அது எவ்வளவு தீமையாகிறதென்பதை ஆய்ந்தறிக.

நறுமணத்தில் ஈடுபட்ட மனம் நாற்றமுள்ள நற்பொருளைத் தேடியலைகிறது நறுமணப் பொருட்களின் வழியாக நங்கையரின் பக்கம் தூக்கும் காமக் கிளர்ச்சி எழுகிறது. காமத் தலைக்கொண்டோன் தீநெறிக்கண் சென்று அழிதல் ஒருதலை. ஆதலால், நாசியின்பமும் அடக்கியாளுதல் வேண்டுமென்க.

இசையில் உருகாதார் எவர்? இறைவனை இசையால் உருகிப் பாடல்...

---

## இன்பத்தின் நிலை இதுதானா?

2-ம் பக்கத் தொடர்ச்சி

...ன்று உடனே புறப்பட்டார். நகர எல்லையை அடைந்தார் நதிக் கரையைக் கண்டார் ஆற்றோரத் தருகே சற்றே தரித்தனர். ஆழ்ந்த நித்திரை சூழ்ந்தது.

சில நாழிகை கழிந்தது. நித்திரைவிட்டெழுந்ததும் ஆசிரியர் ஓர் ஓடத்தைக் கண்டார் எழுந்து ஓடத்தின் அருகே சென்று ஓடக்காரனைப் பார்த்து அக்கரையில் விடுவாயா? என்று வினவினர். வகையிலே பெண்ணைக் கண்ட ஓடக்காரன் ஆற்றுப் பெருக்கென்றும் கவனியாது புறப்பட்டான். சிறிது தூரம் சென்றதும் ஓடத்தில் ஏதோ ஓர் பொருள் சிக்கிக்கொண்டது போல தோன்றியது! நிலவின் ஒளியில் கூந்தல் எனத் தெரியவந்தது!! இருவரும் உடனே கூந்தலைப் பிடித்திழுக்க ஓர் பெண்ணின் உருவம் தோன்றியது. உருவத்தை ஓடத்துள் எடுத்துவைத்துச் சமயோசித சிகிச்சை செய்துகொண்டிருக்கும் பொழுது................................

................................ (வளரும்.)

---

...யால், புல்லிய மனிதரோ அதில் மயங்காத மற்றுயாவர்? பேதைக் குழந்தையும் இசையில் உருகிவிடுதல் யாவருமறிந்ததே.

இறைவனைக் குறித்துப் பாடியுருகும் இசையாயின் என்றும் நன்றே. அஃதின்றி, பற்றினை வளர்த்துச் சிற்றின்பச் சேற்றுக்குழியில் தள்ளி மனித வாழ்க்கையின் நோக்கத்தைக் குலைப்பதாயின் அதனை அடக்கவேண்டுமென்பதை எவர்தான் மறுப்பர்?

இங்ஙனம் ஐம்பொறிகளாலுமாறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை எனனும் ஐம்புலன்களையும் அடக்கியாளப் பயிலுதல் மக்களுக்கு இன்றியமையா வொழுக்கமாகும். இதுவேயே மெய்யடக்கமாம் மெய்யடக்கங்கொண்ட மேலோன் சிறப்புடைய வாழ்க்கையிற் செல்வோனாவன்,

"ஒருமையுள் ஆமைபோல்
ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து."

என்ற வள்ளுவர் வாக்கையும் கண்டு சிந்திக்க வேண்டும். ஐம்புல ஆசையைத் தீயவழியிற்செல்லாது அடக்கும் ஆண்மையுடையோன் மொழியடக்கம் கொள்ளுதல் ஒருதலை. மொழியடக்கிலுள் சிந்தனை பெருகும்; சிந்தனை வழியே மெய்ப்பொருள் தோன்றும்.

---

## விபரீத வாக்காளர் இடாப்புகள்

### ஆபிரிக்க நீதிமன்றத்தின் அறிவுசான்ற தீர்ப்பு

ஐரோப்பியர்களுக்கு வேறு மற்றவர்களுக்கு வேறு பிரதிநிதிகளும் ஐரோப்பிய வாக்காளருக்கு மற்றவர்களுக்கு வேறு வாக்காளர் இடாப்புகளும் அமைக்கும் ஓர் அநீதியான சட்டத்தைத் தென் ஆபிரிக்க அரசாங்கம் அமைத்தது. இதை எதிர்த்து ஐரோப்பியரல்லாதார் நால்வர் வழக்குத் தொடர்ந்தனர். அவர்கள் வேண்டுகோளின்படி அச்சட்டத்தை ஒதுக்கும் ஒரு தீர்ப்பை உயர்தர நீதிமன்றம் கொடுத்திருக்கின்றது.

அநீதிக்குத் தக்களவு அலங்கோலநிலை ஆபிரிக்க அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

---

## வைத்தியசாலைத் திறப்பு விழா

யாழ்ப்பாணம் புதியதெருவில் Dr. நா. கோபாலபிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட Modern Dispensary யை யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் திரு. சாம் சபாபதி அவர்கள் சென்ற (22-3-52) இல் திறந்துவைத்தார்.

---

**வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள்
வியாபாரம்
விருத்தியுறவேண்டுமா?
●
அப்படியானல்
இந்துசாதனத்தில்
விளம்பரஞ்
செய்யுங்கள்

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
முனிமார்க்ஓடுகள்
13, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் ஐக்கியசாபந்தி
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த சேமுபவாகலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட சேஷமப் பணம்.
சேஷமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏறபடும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாசைவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகபாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிருப்பர்.

# தண்டியடிகள் தனிப்பெருந் தொண்டு

## சைவ மணங் கமழ வாழ்ந்த சிவநேசர்

சோழவள நாட்டிலே திருவாரூரில் பிறக்கும் பெருந்தவமுடைய தண்டியடிகள் ஒருவர் இருந்தார். அவர் பிறவிக் குருடர். முன் பல பிறவிகளில் ஈட்டிய தவப்பேருக தில்லையில் ஆடும் பெருமான் செம்பொற்கழல் மனத்துக் கொண்ட கருத்தினர். நினைத்தற்கரிய பெரும் பேற்றைக் கொடுக்கும் சிவதொண்டிற் செறியச் சிறந்தனார். நித்தமும் பூங்கோயிலில் கோயில் வழிபாடு செய்பவர். அக்கோயில் மேலை வீதியில் திருக்குளப் பக்கம் சமணருடைய பாழிகளாகி இடத்தினுலே குறைவு ஏற்பட்டிருந்ததை அறிந்து அத்திருக்குளத்தைத் தாம் பெருகக் கல்ல வேண்டுமென்று நினைத்து ஒரு தறியை நட்டுக் கயிறுகட்டித் தடவிச்சென்று மண்ணைக் கல்லிக்கரையில் போட்டுத் திருப்பணி செய்திருந்தார். சமணர்கள் பொறுமாகி மண்ணைக் கல்லில் பிராணி வருந்துமென்றுரைத்தார். மாசு சேர்ந்த முடையுடலார் மாற்றம் கேட்டு தேசு பெருகும் திருத்தொண்டர் திருவிளிகள்! பூசு நீறு சாந்தமெனப் புனைந்த பிரானுக்கு ஆன பணி ஆகிலாதல்லறமாவது அறியவருமோ வுமக்கென்றுர். கேட்ட அறிவிலாச சமணர்கள் நாங்கள் கூறும் அறம் கேளாய் செவியு மிழந்தாயோ வென்றுர். மந்தவுணர்வும் விழிக்குருடும் கேளாச்செவியு முமக்கே யுள்ளன. வில்லால் எயில் மூன்றெரித்தபிரான் விரையார் கமலச் சேவடிகளல்லால் வேறு காணேன் யான் நீரறிதற்கு ஆர் என்றும், நிலவா நிலையிருணர்வின்றி துவண குருடாய் என் கண் உலகெலாங் காண யான் கண்டால் என் செய்வீர் என்றும் அடிகள் அடுத்தறைந்தார். உங்கள் தெய்வத் திருவருளால் கண் நீ பெறுவல் நாளைக் இவ்வூரில் இரோம என்று கூறி மண்வெட்டியைப் பறித்து கயிறும் தறியும் உடன் பறித்தார். சமணர்கள் செய்த வெய்ய தொழிலால் வெகுண்ட தண்டியடிகள் பூங்கோயில் மணிவாயிலில் வந்திறைஞ்சி ஐயனே இன்று சமணர்கள் எம்மை யவமானஞ் செய்யவாவதானேன். இது தீர நல்குமடியேற்கென விழ்ந்தார், விண்ணப்பம் செய்து தொழுதுபோந்து மடம்புகுந்து அயபணிசெய்யப் பெருது அழுது கங்குலில் துயின்றுர். சொப்பனத்திலே உலகங்கள் முழுதுமளிக்கு முதல்வன் மூன்னின்று தண்டியே உன் கவலையை ஒழி. நாளைக்கு உன் கண் காணவும் சமணருடைய கண் மறையவும் அருள் செய்வோம் பயப்படாதே யென்று அருளிச் செய்து சோழராசாவுக்கும் சொப்பனத்திலே தோன்றி தண்டியென்பவன் எனக் குக்குளம் கல்ல சமணர்கள் பொறுது விக்கினம் செய்தார் நீ சென்று அவன் கருத்தை முடிப்பாய் என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தருளினுர். இராசா விழித்து எழுந்து பெருமானைத் தியானித்து வணங்கி சூரியன் உதயமானவுடன் தண்டியிடம் சென்று விசாரித்தான் தண்டியடிகள் நிகழ்ந்தவற்றைக் கூறி இனிமேல் நிகழ்வனவற்றையும் கண்டு வழக்கை முடித்தல்வேண்டுமென்றுர். சமணர்களும் அதற்குடன்பட்டார்கள். தண்டியடிகள் பரமசிவனே மெய்க்கடவுள் என்றும் சிறியேன் அவருக்கடியேனுமாகில் இவ் வரசனுக்கு முன்னே நான் கண்பெற்றுர் சமணர்கள் கண் இழக்கவும் வேணுமென்று ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உச்சரித்துக்கொண்டு திருக்குளத்தில் முழுகிக் கண்பெற்றெழுந்தார். சமணர்கள் கண் இழந்து தடுமாறினுர்கள். அரசன் சமணர்களைத் திருவாரூரில் நின்றும் அகன்றுபோகும்படி துரத்திவிட்டான். பின்பு சமணர் பாழிகளையும் பளிகளையும் பறித்துத் திருக்குளத்துக்கரைகட்டி மன மகிழ்ந்து தண்டியடிகளை வணங்கிக்கொண்டு போயினுன். தண்டியடிகள் ஸ்ரீ பஞ்சாட்சரத்தைச் செபித்துத் திருத்தொண்டு செய்துகொண்டிருந்து சிவபதமடைந்தனுல் நாமுணரவிருப்பது. 'தவத்தினிலுணர்த்த' என்னும் சிவஞானபோத 8-ம் சூத்திரக் கூற்றுக்கமைய அடிகள் முற்பிறவிகளில் செய்த தவங்கள் காரணமாக ஆப்பிறப்பு அமைந்ததும், "பல ஊழிகாலமரனையர்ச்சித்தால் கற்புதநிசற்றேகும்" என்ற முறையானே சிவதொண்டு செய்ய கவலெண்ணமுந்தவிதமும், ஊனடைந்த உடம்பின் பிறவியே தானடைந்த உறுதியைச்சார ஆலயவழிபாடும் காவலிடைமுற்றும் காதல் நமச்சிவாய நற்பர்தமே யோவாவண்பில் எடுத்தோதச் சித்தித்தமையும் சைவத்துக்குக் கோயில் உயிர். இக்காலத்தவ் கோயில வழிபாட்டுக்குப் பதிலாக வீட்டில் வழிபடலாமென றும கோயில் மூலைமூடுக்குகளிலும் தூண்பக்கங்களில நின்று நினைத்தாலும் சரியென்று பேசப்படும் பிழை வழிகளை விலக்கவேண்டியே அடிகள் குளக்கரையில நின்று குமபிடாது புறக்கண்ணிலாதிருந்தும் சன்னிதானத்தில சென்று குமபிட்டாரென்ற ஒழுக்கமும், மெய்த்திருப்பி விதிர்விதிர்த்து எம் பெருமான்விரையார் கழலை கைதன் தலைவைத்து கண்ணீர் ததும்ப வெதும்பி உள்ளம் பொய்தாவ தவிர்த்து போற்றி அவனிடமடைக்கலம் புகுந்தால்" யான செய்தேன் பிறர் செய்தாரென்னதியாதென்னுர் மக்கோணை ஞான வெறியால் வெதுப்பி நிர்த்துச் தான் செவ்வே நின்றிடவைத்தவன்றுன் கேபே, தலையளித்து முன்னிற்குமா என்ற சித்தியார் கூற்றினபடி பெருமான் முன்னின்று அருள் செய்த திறமும், மறைபரவும் சைலத்தவகெறியலலாறெறியே பவ நெறியென்ற உண்மையும், பரமேசுவன் தேவிக்கு சதுர்யுக தர்மங்களும் உறிய பிரனர் இனிக் கலியுகத்தல் அறுபத்துமூன்று தொண்டர்கள் பிறந்து தமமேற் பக்தி செய்வார்கள் எனவும், பரமேஸ்வரமாகிய சிவாகமத்திலே நவமாகிசத்தில் பெறப்படுதலாலும்" என்றபடி பாமேசுவான வேதாந்தங்களை வகுத்து தலைவகளின் கருத்தினை வாழ்க்கையிலும் அமைத்துக்காட்டி நன்மகோடிகளையும் க்க வேண்டுமென தன்பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலச் சிறந்த எமபெருமானின் கருணையின் பிரவாகமும் பிறவும் மலிந்துகிடப்பதைக் காணலாம். சிவகதைகளைக் கேட்டு உணர்ந்து உயவோமாக.

"..."

சைவத் திருவாளர்
**பொ. அப்புக்குட்டி**
அவர்கள் எழுதியது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—

இலக்கம் 6627 D. C. J.

வளக்காளி:— வீரசத்தி தம்பிப்பிள்ளை கோண்டாவில்.

எதிரி:- 1. செல்லர் பொன்னப்பா
2. அன்னபூரணிஅம்மா
3. பாலசிங்கம்
4. பரமேஸ்வரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 6627-ம் இலக்கத்தில் தீர்ந்த தீர்வையின்பிரகாரம் 228 ம் இலக்க ஈட்டின்பேரால் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்வரும் ஆதனங்களை 1952 வைகாசி மாசம் 2-ந் திகதி வெள்ளிக் கிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

1. கோண்டாவில் கொடிநாகி என்னும் காணி கில இலா. 12-ஆதல் சொரியலாக அரைவாசியும் செல்லையா பெண் ஆச்சிமுத்தவின் காணியில் உவளணைற்றுப் பக்கும் வளிவாய்க்காலும எல்லை கிழக்கு - செல்லப்பா பெண் தங்கமுத்தவும், செல்லத்துரை பெண் செகலமுத்தவும பககானரும், வடக்கு - ஒழுங்கை மேற்கு - ஒழுங்கையும் சுப்பையா பெண் பாறுபதியும் மறுபேரும், தெற்கு - நடராசா செல்லப்பா— இதடங்கலும்.

2. கோண்டாவில் இந்தனை என்னும் காணி நில. இலா. 2 குளி 5 கிழக்கு ஒழுங்கை, வடக்கு- கடைகிலம், மேற்கு - நடராசா பெண் சரஸ்வதி, தெற்கு பண்டாரம் செல்லப்பா - எல்லேருக்கும் மேற்கேயுள்ள கிணற்றுப் பங்கும் வலது வழியும், வசுது வழி வாய்க்காலும் - இதடங்கலும்.

S. RATNASABAPATHY,
Commissioner of Sales
M. 256 28—3—52.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE
தங்கநகைகள் ... நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=0=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.

சாலாமிஸ்ரி லேகியம

இதனுல் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிசயமாய்க் காணுதலால் வேசிகம் பல கோயகளும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருருத்தல் விலை ரூபாய் 25-00, அரைருத்தல் விலை ரூபாய் 12-50, கால்ருத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

சிவஞான பற்பொடி
சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம வருதல், பல்லில் அரணை கட்டல் பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.
போட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday March 28, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org